செ.வெ.எண்: 444/2019 நாள்: 14.9.2019

# ஜவ்வாது மலையில் ஒரு இலட்சம் விதைப் பந்துகள் வீசப்பட்டது மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்...

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலை ஊராட்சி ஒன்றியம், ஜவ்வாதுமலை அடிவாரம், ஸ்ரீ ரேணுகாம்பாள் ஆலயம் அருகில், ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் இன்று (14.9.2019) ஜவ்வாது மலைப் பகுதிகளில் முதல் முறையாக ஒரு இலட்சம் விதைப் பந்துகள் வீசும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத் துறை, பள்ளிக் கல்வித் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய்த் துறை, போளூர் பேரூராட்சி, ஆகிய துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், தன்னார்வலர்கள் மற்றும் போளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, சாணார்ப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி, ஆகிய பள்ளிகளைச் சார்ந்த 300-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் உட்பட 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது 'திருவண்ணாமலை மாவட்டத்தில் நிலத்தடி நீர் அதிகரிக்கவும், மழை நீ சேரிக்கவும், ஏரிகள், குளங்கள், குட்டைகள் தூர்வாரி நீர் நிலைகளில் அதிகப்படியான தண்ணீர் சேமிக்கவும், ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை இயக்கத்தின் கீழ் பல்வேறு பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. நம் வீடுகளில் சமையல் அறை, குளியல் அறையில் பயன்படுத்தும் தண்ணீரை நாம் வீணாக்காமல் நமது தோட்டத்தில் விட வேண்டும். மழை நீர் சேகரிப்பதற்கு ஊரக வளர்ச்சித் துறை உட்பட பல்வேறு துறைகள் மூலமாக தொடர்ந்து திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இது ஒரு அங்கமாக மாவட்ட முழுவதும் மரக் கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

மழை நிரந்தரமாக பொழிவதில்லை, மழை நீரை சேமித்து இயற்கை வளத்தை நாம் பாதுகாக்க வேண்டும். நம் வீடுகளில் பெய்யும் மழை நீரை நாம் சேமித்தால், வருடம் முழுவதும் நாம் சேமிக்கும் தண்ணீர் நமக்கு பயன் தரும். மலைப் பகுதிகளில் அனைத்து இடங்களிலும் மரம் நடுவது கடினம், அதற்காக தான் விதைப் பந்து வீசப்படுகிறது. இதன் மூலம் ஏற்கனவே காடுகளில் இருக்கும் மரங்களின் எண்ணிக்கை உயர்ந்து காடு மேலும் அடர்த்தியாகும். இதனால் மரங்கள் மழை தரும், நிழல் தரும் நிலத்தடி நீர் மட்டம் அதிகரிக்கும். கடந்த ஒரு மாதமாக விதைப் பந்துகளை தயாரித்துள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஜவ்வாதுமலை அடிவாரம், ஸ்ரீ ரேணுகாம்பாள் ஆலயம் அருகில் அரசு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனம், பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து மலைப் பகுதியில் ஒரு இலட்சம் விதைப் பந்துகள் வீசும் பணியை தொடங்கி வைத்தார். இவ்விதைப் பந்துகளில் புங்கன், புளி, வேம்பு, மலை வேம்பு, தேக்கு, நாவல், கடுக்காய் போன்ற வகை மரங்களின் விதைகள் இடம் பெற்றுள்ளது. ஜவ்வாதுமலையில் மிதி பகுதியில் உள்ள கண்காணிப்பு கோபுரம், மதியன்கோட்டை, காட்சி முனை உட்பட பல்வேறு பகுதிகளில் ஒரு இலட்சம் விதைப் பந்துகள் வீசப்படுகிறது.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் போளூர் பேரூராட்சி சார்பாக ஜல் சக்தி அபியான் - நீர் மேலாண்மை இயக்கத்தின் விழிப்புனர்வு பிரச்சார வாகனத்தை பார்வையிட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**